Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 169

வியாழக்கிழமை
14 மே 2026

வைகாசி 01 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –12
விலை – ரூபா 50

## ஹெரோயின் வைத்திருந்த குற்றவாளிக்கு கடூழியம்

யாழ்ப்பாணம், மே 14
தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில், ஹெரோய்னை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபருக்கு ஏழு வருட கடூழியச்

»11

மன்னார் மாவட்டத்தில்

# இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள காணிகள் விரைவில் விடுவிப்பு

பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் ஆய்வு
இழப்பீடு வழங்கவும் அரசாங்கம் எண்ணம்



மன்னார், மே 14
மன்னாரில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளில் கணிசமானவை ஜனாதிபதி அநுரவின் விசேட உத்தரவுக்கு அமைய விரைவில் விடுவிக்கப்படவுள்ளன - என்று பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தெரிவித்தார்.

»11



## தொடர் திருட்டில் ஈடுபட்ட கணவன், மனைவி கைது!

கிளிநொச்சி, மே 14
கிளிநொச்சியில் பல்வேறு பகுதிகளில் நகை உட்பட பெறுமதியான பொருள்களைத் தொடர்ச்சியாகத் திருடிய தம்பதியர் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

»11

திருநெல்வேலியில்

## அனுமதியற்ற கட்டுமானத்தை இடித்து அகற்றுமாறு உத்தரவு

யாழ்ப்பாணம், மே 14
நல்லூர்ப் பிரதேசசபையின் அனுமதியின்றி திருநெல்வேலியில் அமைக்கப்பட்ட வர்த்தக நிலையமொன்றின் மூன்றாவது தளத்தை இடித்து அகற்றுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
நல்லூர்ப்பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட

»11

## குமுதினிப் படுகொலை நினைவேந்தல் நாளை!

யாழ்ப்பாணம், மே 14
குமுதினிப் படுகொலையின் 41ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை நெடுந்தீவில் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்படவுள்ளது. படுகொலை செய்யப்பட்ட உறவுகளின் ஆத்மசாந்திக்கான வழிபாடுகள் , நாளை காலை 8.30 மணியளவில் நெடுந்தீவு மாவிலித்துறை

»11

## கடற்பகுதிகளில் சீரற்ற காலநிலை

அவதானமாகச் செயற்படுமாறு மீனவர்களுக்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், மே 14
நாட்டைச் சூழவுள்ள கடற்பகுதிகளில் குழப்பமான காலநிலை நிலவும் நிலையில், மீனவர்களை மிகவும் அவதானமாகச் செயற்படுமாறு கடற்றொழில் திணைக்கள பணிப்பாளர் நாயகம் அறிவுறுத்தல்

»11




## தமிழினப் படுகொலைகளுக்கு அல்லைப்பிட்டியில் அஞ்சலி!

யாழ்ப்பாணம், மே 14
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் இரண்டாம் நாளான நேற்றையதினம் அல்லைப்பிட்டியில் அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் முள்ளிவாய்க்

»11

## ட்ரோன்களின் முன்னோடி விடுதலைப்புலிகளே!

கொழும்பு, மே 14
உலகில் தற்போது இடம்பெறும் ட்ரோன்களை மையப்படுத்திய போரின் முன்னோடிகள் விடுதலைப்புலிகளே - இவ்வாறு சிறிலங்கா விமானப்படையின் முன்னாள் தளபதி ககன் புலத்சிங்கள தெரிவித்துள்ளார்.
கொழும்பு ஊடகம் ஒன்றில் எழுதியுள்ள கட்டுரையில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:-
தேசிய அரசுகளின் தனித்துவமான களமாக வான்பரப்புகள் இனி இருக்காது என்ற கருத்தியலை முதன்முதலில் விதைத்தவர்கள்

»11

## 'ஐஸ்' போதையை விழுங்கியவர் உயிருக்கு ஆபத்தான நிலையில்

யாழ்ப்பாணம், மே 14
ஐஸ் போதையை பைக்கற்றுடன் விழுங்கிய இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.
சம்பவம் தொடர்பில்

»11



யாழ். பல்கலை மாணவர்களால்

## கிளிநொச்சியில் நேற்று முள்ளிவாய்க்கால் கஞ்சி

கிளிநொச்சி, மே 14
முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தலை முன்னிட்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்

»11

வட்டுக்கோட்டைத் தீர்மானம்

## பொன்விழா நிகழ்வு இன்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், மே 14
வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்ட பொன்விழா நிகழ்வு இன்று மாலை 4 மணிக்கு

»11

கிளிநொச்சி இராமநாதபுரம் பகுதியில்

## சிறுமி வன்புணர்வு; ஒருவர் மறியலில்!

கிளிநொச்சி, மே 14
கிளிநொச்சி – இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சிறுமியை வன்புணர்ந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
பொருளாதாரத்தில் நலிவு நிலையில்

»11



முச்சந்தி முனி

"தீர்மானத்துக்கு விழா எடுக்கிறது முக்கியமில்லை அந்தத் தீர்மானத்தைக் காப்பாத்தவெல்லோ வழிபாக்க வேணும்"

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 13.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4430 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 24 45 54 70 |
| விசேட எழுத்து | E |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 13.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1497 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 11 16 39 58 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 13.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0456 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 1 2 1 3 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 13.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2536 |
| ஆங்கில எழுத்து | I |
| சுப்பர் இலக்கம் | 07 |
| வெற்றி இலக்கங்கள் | 10 19 45 60 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 13.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6188 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 8 8 3 0 1 7 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 13.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2218 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 08 40 52 64 |
| விசேட எழுத்து | U |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 13.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0304 |
| வெற்றி இலக்கினம் | கன்னி |
| வெற்றி இலக்கங்கள் | 29 41 45 |

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 13.05.2026 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 0896 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கம் | 8 7 7 2 0 8 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 13.05.2026 |
| தினம் | புதன்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3162 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கம் | 30 41 63 67 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 13.05.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கம் | 17 69 78 79 |
| வெற்றி வாரம் | 5323 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 13.05.2026 |
| தினம் | புதன்கிழமை |
| வெற்றி வாரம் | 0992 |
| வெற்றி இலக்கம் | 21 28 34 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 13.05.2026 |
| தினம் | புதன்கிழமை |
| மேஷம் | |
| வெற்றி இலக்கம் | 07 20 27 57 |
| சீட்டிழுப்பு வாரம் | 4874 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 13.05.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | P |
| சுப்பர் இலக்கம் | 14 |
| வெற்றி இலக்கம் | 01 48 55 73 |
| வெற்றி வாரம் | 2338 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 13.05.2026 |
| தினம் | புதன்கிழமை |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கம் | 07 19 32 57 |
| வெற்றி வாரம் | 2988 |

### யாழ். கலாசார மத்திய நிலைய

# முகாமைத்துவப் பணிகளுக்காக 'நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்'

**கொழும்பு, மே 14**

**யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையத்தின் முகாமைத்துவப் பணிகளை மேற்கொள்வதற்கு 'நம்பிக்கைப் பொறுப்பு நிதியமொன்றை' ஸ்தாபிப்பதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையத்தைப் பேணிச் செல்வதற்காகக் கையொப்பமிடப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையத்தின் நிர்மாணப்பணிகள் பூர்த்தியடைந்த பின்னர் அரசாங்கத்தின் ஊடாக யாழ். மாநகரசபைக்குப் பாரப்படுத்தப்படவுள்ளது.

இவ்வாறு பாரப்படுத்தப்பட்ட பின்னர் முகாமைத்துவப் பணிகளை மேற்கொள்வதற்காகவே நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஸ்தாபிக்கப்படவுள்ளது.

அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள நம்பிக்கைப் பொறுப்புறுதி வரைபுக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கமைய, யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையத்தின் முகாமைத்துவச் செயற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொண்டு செல்வதற்கான நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை உருவாக்குவதற்கு புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச-இ)



## டொலர் வருமானம் ஏப்ரலில் அதிகரிப்பு

கொழும்பு, மே 14

2026ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கைத் தொழிலாளர்கள் மூலம் ஈட்டப்பட்ட வெளிநாட்டுப் பணப்பரிமாற்றத்தின் அளவு 767.9 மில்லியன் அமெரிக்க டொலராக உயர்ந்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 19 சதவீத வளர்ச்சியாகும். 2025ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இலங்கைக்குக் கிடைத்த வெளிநாட்டுப் பணப்பரிமாற்றத்தின் அளவு 646 மில்லியன் அமெரிக்க டொலராகக் காணப்பட்டது.

மத்திய வங்கியின் தரவுகளின்படி, 2026ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மட்டும் 3,062.8 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டுப் பணப்பரிமாற்றமாக இலங்கைக்குக் கிடைத்துள்ளது. 2026 இன் முதல் நான்கு மாதங்களில் 79,954 பேர் வேலைக்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## மனுஷவின் 5 வங்கிக்கணக்குகளை ஆய்வு செய்ய நீதிமன்று உத்தரவு

கொழும்பு, மே 14

பணச் சுத்திகரிப்புத் தடுப்புச் சட்டத்தின்கீழ் முன்னாள் அமைச்சர் மனுஷநாணயக்காரவுக்கு எதிராகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் முன்னெடுத்துவரும் விசாரணைகளுக்காக, அவரின் 5 வங்கிக் கணக்கு விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு நீதவான் நீதிமன்ற நீதிவான் அசங்க எஸ். போதரகம முன்னிலையில் இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தபோதே இவ்வாறு உத்தரவிடப்பட்டது. விசாரணை அதிகாரிகள் மன்றுக்குத் தெரிவித்த தகவல்களின்படி, மனுஷ நாணயக்கார தனது சொத்து மற்றும் பொறுப்பு விவரங்களை உரிய முறையில் சமர்ப்பிக்கவில்லை என்பது தெரியவந்துள்ளது.

குறித்த வங்கித் தகவல்களை 14 நாள்களுக்குள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைப் பிரிவினரிடம் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## வெல்லவாயவில் மண்சரிவு



கொழும்பு, மே 14

வெல்லவாய பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மஹாஆரகம, உல்கந்த பகுதியில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

உல்கந்த மலைப்பகுதியின் பெரும் பகுதி இவ்வாறு மண்சரிவுக்குள்ளாகியுள்ளதுடன், பெரிய அளவிலான மண்மேடுகளுடன் மரங்களும் வேரோடு சாய்ந்துள்ளன. மண்சரிவு குறித்த அடுத்தகட்ட நடவடிக்கைகளை மொனராகலை மாவட்ட இடர் மேலாண்மைப் பிரிவு முன்னெடுத்துள்ளது. (ச-இ)

## இலங்கை – பெலாரஸ் இடையே புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்து!

கொழும்பு, மே 14

இலங்கைக்கும் பெலாரஸுக்கும் இடையிலான இராஜதந்திர மற்றும் பொருளாதார உறவுகளைப் பலப்படுத்தும் நோக்கில், வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விசேட விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

மே 12 முதல் 15ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படும் இந்த விஜயத்தில் இலங்கை - பெலாரஸ் இடையே புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன.

இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை விரிவுபடுத்தும் நோக்கில், முக்கியமான நான்கு துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவதற்கு அமைச்சரவை ஏற்கனவே அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய அமைச்சரின் இந்தப் பயணத்தின்போது விமானசேவைகள் ஒப்பந்தம், கல்வி மற்றும் தொழிற்கல்வி, சுகாதாரத்துறை, வெகுசன ஊடகத்துறை ஆகியவற்றில் உடன்படிக்கைகள் எட்டப்படவுள்ளன. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நீதித்துறை சுதந்திரத்துக்கு அரசாங்கத்தால் அச்சுறுத்து!

## பிரதம நீதியரசருக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடிதம்

கொழும்பு, மே 14

மஹரகமவில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கு ஒன்றின் தீர்ப்புக் குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்து நாட்டின் நீதித்துறை சுதந்திரத்தின் மீதான கடுமையான தாக்குதலாகும் எனச் சுட்டிக்காட்டி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பிரதம நீதியரசர் ப்ரீத்தி பத்மன் சூரசேனவுக்கு கடிதமொன்று அனுப்பிவைத்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட பல்வேறு முக்கியமான அரசியல் பிரதிநிதிகளால் இந்தக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது-

மஹரகம மே தினக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள ஒரு வழக்கைக் குறிப்பிட்டு, அதன் தீர்ப்பு மே மாதம் 25ஆம் திகதி வழங்கப்படவுள்ளதாகவும், அந்தத் தீர்ப்பைக் கைதட்டல்களுடன் வரவேற்க தற்குத் தயாராக இருக்குமாறும் மக்களைக் கேட்டுக்கொண்டார். தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன்னரே அது குறித்து ஜனாதிபதி முன்கூட்டியே அறிந்திருப்பதைப் போன்ற தோற்றத்தை இது ஏற்படுத்துகிறது. இது அரசியலமைப்பின் அடிப்படைத் தத்துவத்தை மீறும் செயலாகும். நிலுவையிலுள்ள வழக்குக் குறித்து ஒரு குறிப்பிட்ட தீர்ப்பை மக்கள் கொண்டாடுவார்கள் எனக் கூறுவது, தெளிவான நீதிமன்ற அவமதிப்பாகும். இந்த விவகாரம் தொடர்பில் பிரதம நீதியரசர் உடனடியாகத் தலையிட்டுத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றுள்ளது. (ச-இ)

# கிளாலி -ஆனையிறவு கடற்கரை வீதி புனரமைப்பு

தென்மராட்சி, மே 14

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்துக்குட்பட்ட கிளாலி முதல் ஆனையிறவு வரையிலான 7 கிலோமீற்றர் நீளமான கடற்கரை வீதியை ஐரோட் திட்டத்தில் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான முதற்கட்டக் கள ஆய்வுகள் நேற்று இடம்பெற்றது. இதன்போது பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர், பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபைத் தவிசாளர் மற்றும் ஐரோட் திட்டத்தின் உயர்மட்ட அதிகாரிகள் வீதியின் தற்போதைய நிலைமை மற்றும் புனரமைப்புத் தேவைகளை நேரில் பார்வையிட்டு மதிப்பீடு செய்தனர்.

இந்த வீதிப் புனரமைக்கப்படுவதன் மூலம் சாவகச்சேரியிலிருந்து ஆனையிறவு வரை பயணிக்கும் வாகனங்கள் ஏ-9 பிரதான வீதியைப் பயன்படுத்தாமல், இந்தக் கடற்கரை வீதியூடாகப் பயணிக்க முடியும். (ச-9)

# கலாசாரத் திணைக்கள தரவில் ஜோதிட நிபுணர்கள் உள்ளீர்ப்பு

யாழ்ப்பாணம், மே 14

இலங்கையின் கலாசார மரபுகளைப் பாதுகாக்கும் முயற்சியாக, நாடு தழுவிய ரீதியில் இயங்கும் ஜோதிடத் துறை சார்ந்த ஆர்வலர்கள் மற்றும் நிபுணர்களை கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தரவுத் தளத்தில் இணைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஜோதிடத் துறையில் ஆர்வமுள்ளவர்கள் அல்லது அந்தத் துறையில் தொழில் புரிபவர்கள் தமது சரிபார்க்கப்பட்ட தகவல்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அந்தந்த பிரதேச செயலகத்தில் உள்ள கலாசார அலகுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் கலாசார உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ச-9)

# அஸ்வெசும பயனாளிகள் 49,000 பேருக்கு புத்தாண்டுக்கு இரட்டைக் கொடுப்பனவு

கொழும்பு, மே 14

அஸ்வெசும பயனாளிகள் சுமார் 49,000 பேருக்கு தமிழ் சிங்களப் புத்தாண்டுக்காக வழங்கப்பட்ட விசேட நிவாரணக் கொடுப்பனவு இரு தடவைகள் வழங்கப்பட்டுள்ளது என்று நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது. வங்கிக்கு அனுப்பப்பட்ட விபரங்களின் ஒரு தொகுதி இரு முறை பதிவேற்றப்பட்டதால் இந்தத் தவறு நிகழ்ந்துள்ளது. இந்தத் தவறு உடனடியாகக் கண்டறியப்பட்டுள்ளதால், மே மாதத்துக்கான கொடுப்பனவின்போது அதைச் சரிசெய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பாக சுதந்திர வழக்கறிஞர்கள் அமைப்பு உள்ளிட்ட அமைப்புகள் விசாரணை கோரியுள்ளன. (சு-இ)



# மஹிந்தவைக் கைதுசெய்தால் அரசாங்கம் மண்கவ்வுமாம்!

## கூறுகிறார் விமல்

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்த மஹிந்த ராஜபக்சவை ஒருவேளை அரசாங்கம் கைதுசெய்யமுயன்றால், அந்த நிமிடமே அரசாங்கம் கவிழும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமானவிமல் வீரவன்ஸதெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- வெளிநாடுகளில்வாழும் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவே மஹிந்தராஜபக்ச இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளார். தற்போதைய அரசாங்கத்தில் இடம்பெறும் ஊழல்களை மறைப்பதற்காகவும், கடந்த கால ஊழல்களை மாத்திரம் தோண்டி எடுப்பதில் அரசாங்கம் குறியாக இருக்கிறது. மஹிந்த ராஜபக்சவின் சொத்து விபரங்களை ஆராய்வதில் அரசாங்கம் கவனம் செலுத்துகிறது என்றார். (ச-இ)




# வெந்த புண்ணில...!

விழுந்த மாட்டுக்குக் குறி வைக்கிறதெண்டால் எங்கட ஆக்களுக்குக் கடும் புளுகம். அந்தக் குணத்தால ஒண்டையுமே தீர ஆராயாமல் தாங்கள் நினைச்சபாட்டுக்கு அடுத்தவையில அவதூறைப் பரப்பிறது ஒரு வியாதியா மாறிப்போட்டுது. யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியின்ர மருந்து வைக்கிற களஞ்சியமொண்டு நெருப்புப் பிடிச்சு சிட்டடியில எரிஞ்சதெல்லோ. அந்த நெருப்பின்ர சூடு ஆறமுதலே, 'உதெல்லாம் உள்ளடி வேலை. வேணுமெண்டு தான் நெருப்பு வைச்சிருக்கினம். இப்பிடி எல்லாத்தையும் எரிச்சு அவையின்ர ஊழலை மறைக்கப் பாக்கினம்' எண்டெல்லாம் சில சமூக ஊடகக்காரர் வாய்க்கு வந்தபடி உளறத்தொடங்கிட்டினம். அந்த நெருப்பு எப்பிடிப் பத்தினது? என்னென்ன மருந்துகள் இருந்தது? எவ்வளவு மருந்தை மீட்டது? எவ்வளவு மருந்து அழிஞ்சது? எண்டெல்லாம் இன்னும் ஆஸ்பத்திரிக்காரரே கணக்குப் பார்த்து முடியேலை. ஆனால் நெருப்பெரிஞ்ச ஆஸ்பத்திரிப்பக்கமே எட்டியும் பாக்காமல் வீட்டில இருந்தபடி யூரிப்பிலையும், பேஸ்புக்கிலையும்-உது உள்வீட்டுச்சதி எண்டு கொஞ்சப்பேர் தீர்ப்பையே எழுதிப்போட்டினம்.

அந்தக் கட்டடம் சதிவேலையால தான் எரிஞ்சதெண்டு பேஸ்புக்கிலையும், யூரிப்பிலையும், ரிக்ரொக்கிலையும் கம்பு சுத்துறவை கொஞ்சம் வாயை மூடிக்கொண்டு இருக்கிறது நல்லது. ஏனெண்டால் அவையள் 'உது விபத்தில்லை திட்டமிட்ட சதி' எண்டு சும்மா கற்பனையில கலந்த சோதியாச் சொல்லிக்கொண்டிருக்கினமே தவிர, ஒரு ஆதாரத்தையோ தர்க்கரீதியான காரணகாரியத்தையோ முன்வைக்கவேயில்லை. அதோட அவையள் சம்பவ இடத்துக்குக்கூட இதுவரை போகேலை. அப்பிடியெண்டால் ஏதும் மூக்குச்சாத்திரம் பார்த்துத்தான் அவையள் இதுவொரு சதியெண்டு கண்டுபிடிச்சினமோ தெரியேலை. ஒரு பெரிய விபத்து நடந்திருக்கு. அதுவும் கனபேருக்கு உயிர்குடுத்த ஆஸ்பத்திரியின்ர இதயம் எண்டு சொல்லுப்படுற மருந்துக்களஞ்சியமே எரிஞ்சிருக்கு. இந்த நிலைமையில அந்தக் களஞ்சியத்தை புனரமைக்கிறதுக்கும், அழிஞ்சுபோன மருந்துகளுக்குப்பதிலா புதுமருந்துகளை கொண்டுவாறதுக்கும் என்ன உதவியைச் செய்யமுடியுமோ அதைத்தான் இப்ப செய்யோணும். ஏனெண்டால் பெரியாஸ்பத்திரியொண்டும் தனிப்பட்ட ஆக்களின்ர சொத்தில்லை. அது எல்லாருக்குமானது. எப்பிடி நாங்கள் எல்லாரும் 'எங்களுக்கு நல்ல ட்ரீட்மெண்ட் தரோணும்' எண்டு பெரியாஸ்பத்தியில உரிமையோட எதிர்பாக்கிறமோ, அதே உரிமையோட அதை வளர்க்கவும், தேவையான உதவியைச் செய்யவும் பின்னடிக்கக்கூடாது. அதுவும் இப்பிடியொரு இக்கட்டான நேரத்தில உதவி செய்யாட்டியும் பராவாயில்லை, 'உது சதியால தான் எரிஞ்சது' எண்டு இல்லாததும் பொல்லாததும் சொல்லி வெந்த புண்ணில வேலைப்பாய்ச்சக்கூடாது.

உண்மையில அந்த மருந்துக்களஞ்சியம் எரிஞ்சது பெரியாஸ்பத்திரியை நம்பியிருக்கிற வருத்தக்காரருக்குத்தான் பேரிழப்பு. எத்தினையோ பேரின்ர ஒப்பிரேசன்கள் உந்த அக்சிடெண்டால பின்னுக்குப் போகப்போகுது. ஆஸ்பத்திரி நிர்வாகம் இந்த தீவிபத்தை ஒரு பாடமா எடுத்து இனியெண்டாலும் மருந்துகளை பாதுகாப்பான கட்டடத்தில களஞ்சியப்படுத்தோணும். இப்ப எரிஞ்ச களஞ்சியம் கொஞ்சம் பழைய கட்டடமெண்டும், அதால தான் அது இவ்வளவு கெதியா நெருப்பு பிடிச்சு எரிஞ்சதெண்டும் கனபேர் சொல்லுகினம். அதை ஆஸ்பத்திரி நிர்வாகம் கவனத்தில எடுக்கவேணும் கண்டியளோ.

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரச காணிகளின் பங்கீட்டில் விவசாயிகளுக்கு முன்னுரிமை

வடக்கு ஆளுநர் அறிவுறுத்து

மன்னார், மே 14

அரச காணிகளைப் பங்கீடு செய்யும்போது, வசதி படைத்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்காமல், வறுமை நிலையில் உள்ள விவசாயிகள் பயன்பெறும்வகையில் நடைமுறைகள் அமைய வேண்டும் என வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன் வலியுறுத்தியுள்ளார்.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் மற்றும் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க ஆகியோரின் பங்கேற்புடன் நடைபெற்ற கூட்டத்தில் சிறுபோக நெற்செய்கைக்கான காணிப் பங்கீடு மற்றும் மாவட்டத்தின் அபிவிருத்தித்திட்டங்கள் குறித்து ஆராயப்பட்டது. காணிகளைப் பகிர்ந்தளிப்பதில் நிலவும் சிக்கல்கள் தொடர்பாகவும் நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது.

அரச காணிகளைப் பங்கீடு செய்யும்போது, வசதி படைத்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்காமல், வறுமை நிலையில் உள்ள விவசாயிகள் பயன்பெறும்வகையிலேயே நடைமுறைகள் அமைய வேண்டும் என ஆளுநர் அறிவுறுத்தினார்.

அத்துடன், ஏல முறையில் காணிகள் வழங்கப்பட்டமை தொடர்பான சர்ச்சைகளைத் தீர்ப்பதற்குத் தனியானதொரு விசேட கூட்டத்தை நடத்தி இறுதி முடிவெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

மன்னார் மணல் திட்டுக்களை மையப்படுத்திய சுற்றுலா கப்பல் போக்குவரத்துச் சேவையை ஆரம்பிக்க மன்னார் பிரதேசசபை விரைவாக அனுமதியை வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டது. மாவட்டத்தில் பொதுமக்கள் எதிர்நோக்கும் பல்வேறு போக்குவரத்துப் பிரச்சினைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டு உரிய தீர்வுகள் முன்மொழியப்பட்டன.

(ச-113,56)


## VALIKAMAM WEST PRADESHIYA SABHA, CHULIPURAM
## INVITATION FOR BIDS (IFB) – PSDG & COUNCIL FUND 2026

1. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
2. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2026.05.14 until 2026.05.27 from 09:00 hrs to 15:00 hrs.**
3. Qualification requirements are indicated in Section 4 of the Procurement document. Additional details are provided in Schedule (Section 5) for SBD 3 Documents.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of road construction/Building construction for grade mentioned in the table below.

**" Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million,"**

5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to **The Chairman, Valikamam West Pradeshiya Sabha, Chulipuram (T.P No: 021 225 0144, Fax No: 021 225 0144) during the period from 2026.05.14 until 2026.05.27 from 09:00 hrs to 15:00 hrs. upon payment of a non-refundable fee as mentioned in the table.** The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Local Authority Procurement Committee, Valikamam West Pradeshiya Sabha, Chulipuram at or before 10.00 hrs, 2026.05.29** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
7. Pre-Bid Conference will be held at **Head office, Valikamam West Pradeshiya Sabha, Chulipuram** commencing at **10.00 am on 2026.05.20**
8. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Tables.

| | |
|---|---|
| **Document Issuing/Purchasing Period** | **2026.05.14 until 2026.05.27** |
| **Pre-Bid Conference** | **At 10.00 A.M on 2026.05.20** |
| **Closing and Opening of Bids** | **At 10.00A.M on 2026.05.29** |

| S No | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee | Validity Period days | Bid Validity Date | Required Bid Security: Bid Security Amount | Required Bid Security: Bid Security Validity Date |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | Renovation of Mahakavi Barathy road and adhinsan 2nd lane NP/14/41(17)/02/PSDG/05/2026 | 8.211 | 105 Days | C8 & Above Roads | 3000.00 | 77 days | 14.08.2026 | 83,000.00 | 11.09.2026 |
| 02 | Reconstruction of kaddupulam road 6th,8th lane and Pannagam road 8th lane NP/14/41(17)/02/CF/02/2026 | 7.828 | 84 Days | C8 & Above Roads | 3000.00 | 77 days | 14.08.2026 | 79,000.00 | 11.09.2026 |
| 03 | Reconstruction of Mavadi Moolai road 4th lane, Maniyakaran road, Velankadu 5th lane and Muththumari amman lane NP/14/41(17)/02/CF/03/2026 | 9.917 | 84 Days | C8 & Above Roads | 3000.00 | 77 days | 14.08.2026 | 100,000.00 | 11.09.2026 |
| 04 | Reconstruction of Kulippan Noththarisu Joint road, Kalli road branch lane and Ponnalai Kammalai road 1st lane NP/14/41(17)/02/CF/04/2026 | 9.278 | 84 Days | C8 & Above Roads | 3000.00 | 77 days | 14.08.2026 | 93,000.00 | 11.09.2026 |
| 05 | Reconstruction of Manakadavai lane , Theatre Lane and Paddinasabhai branch lane NP/14/41(17)/02/CF/05/2026 | 6.062 | 84 Days | C8 & Above Roads | 3000.00 | 77 days | 14.08.2026 | 61,000.00 | 11.09.2026 |

**Chairman,**
**Local Authority Procurement Committee,**
**Valikamam West Pradeshiya Sabha,**
**Chulipuram**
**14.05.2026**

(CR 47536)A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை






**பொய்யாமொழி**

**செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி**
**எச்சத்திற் கேமாப்பு உடைத்து**

**பொருள்:** நடுவுநிலைமை உடையவனின் செல்வவளம் அழி வில்லாமல் அவனுடைய வழியிலுள்ளார்க்கும் உறுதியான நன்மை தருவதாகும்.

# மாற்றம் எல்லைவரை வரட்டும்..!

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் தமிழக முதல்வர் ஜோசப் விஜய். அத்துமீறலில் ஈடு படும் தமிழக மீனவர்களையும், அவர்களின் படகு களையும் பத்திரமாக விடுவிக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில் எவ்வாறு முன்னைய தமிழக அர சாங்கங்கள் உறுதியாக இருந்தனவோ, அதே நிலைப்பாட்டையே தமிழக வெற்றிக்கழகத் தலை வரும், தற்போதைய முதல்வருமான விஜய் பிரதி யெடுத்துள்ளார். இதன்மூலம் தமிழகத் தலைமை கள் கூறவிளையும் விடயம் யாதெனில், 'நாம் அத்து மீறுவோம்:நீங்கள்சகிப்புத்தன்மையைக்கடைப்பிடி யுங்கள்' என்பதே.

தி.மு.க.வும் சரி, வைகோ, சீமான், எடப்பாடி, அன்புமணி, அண்ணாமலை உள்ளிட்ட தமிழகத் தின் இதர தலைவர்களும் சரி, அனைவரும் அத்து மீறிய மீன்பிடியைத் தமது தார்மீக உரிமையாகவே பார்க்கின்றனர். அதையொரு பாரதூரமான குற்றச் செயல் என்ற பார்வையில் இருந்து அணுகுவதற்கும் சிந்திப்பதற்கும் அவர்கள் தயாரில்லை. இவர்களில் ஒருவரேனும், ஈழத்தமிழ் மீனவர்களின் நிலைப் பாட்டில் இருந்து இதுவரை சிந்தித்ததாக இல்லை. இவ்வாறான நிலையில், தற்போதைய முதல்வர் விஜய் இந்த விடயத்தில் முன்னையவர்களின் நிலைப்பாட்டைப் பிரதிபலிப்பது அபத்தம். ஒரு நாட்டின் இறைமை என்பது அதன் கடல் எல்லை களையும் உள்ளடக்கியதுதான். எனவே, இந்திய மீனவர்கள் மேற்கொள்ளும் அத்துமீறல் இலங்கை யின் இறைமையுடன் நேரடித் தொடர்புடைய விடயம். ஒரு நாட்டின் வான் பரப்புக்கு மேலாக அனுமதி பெறாமல் விமானங்கள் பறக்க முடியாது. அவ்வாறான நிலைப்பாட்டில்தான், கடற்பாது காப்பும் அணுகப்படவேண்டும். இந்தப் புரிதல் இந்திய மீனவர்களுக்கும், அவர்களின் தலைமை களுக்கும் இருக்கவேண்டும்.

தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகளைப் பயன்படுத்தி, தமது இறைமைக்குட்பட்ட பகுதியில் உள்ள மீன்வளத்தை வழித்துத் துடைத்துவிட்டு, அந்நிய மண்ணுக்குள் அதன் வளங்களைச் சூறை யாடுவது தகாது. இந்திய மீனவர்கள் அன்றாடம் தி ரும்பத்திரும்பச் செய்துவரும் விடயம் இதுதான். எனவே, தமிழக முதல்வர் விஜய், தனது மாநிலத் தின் மீனவர்கள் அத்துமீறி இலங்கைக் கடற்பரப்புக் குள் செல்லக்கூடாது என்பதை துணிச்சலுடன் வலி யுறுத்தவேண்டும். 'தமிழக மீனவர்களின் உரிமை கள் எவ்வளவுதூரம் முக்கியமோ, தலைவனை இழந்து தவிக்கும் ஈழத்தமிழர்களுக்காக குரல் கொடுக்க வேண்டியதும், அவர்களுக்குத்துணைநிற்க வேண்டியதும் அதைவிட முக்கியம்' என்று தனது தேர்தல் பரப்புரையில் விஜய் கூறியிருந்தார். அவரின் கூற்று உண்மையாயின், அத்துமீறிய மீன்பிடியைக் கட்டுப்படுத்துவதில் இருந்து இந்த மாற்றத்தை அவர் ஆரம்பிக்கவேண்டும்.

இலங்கை-இந்தியக் கடலெல்லையில் இடம் பெறும் உண்மையான விடயங்களை எடுத்துக் கூறாமல், தமது சொந்த மக்களைக் கட்டுப்படுத்தத் திராணி இல்லாமல் இருந்த திராவிடக் கட்சிகளின் போக்கை தமிழக வெற்றி கழகம் பிரதியெடுக் கக்கூடாது. 'அத்துமீறாதீர்கள். அத்துமீறினால் கைது செய்யப்படுவீர்கள்' என்ற கூற்றை விஜய் உரத்து ஒலிக்கவேண்டும். தமிழகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் எல்லைக் கடற்பரப்பிலும் ஒலிக்கட்டும்.



# தோட்டத்தொழிலாளர்களுக்கு புதிய ஓய்வூதியத் திட்டம்!



கொழும்பு, மே 14

**இலங்கையின் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் தேயிலை தொழிற்சாலை ஊழியர்களின் எதிர்கால நலனைக் கருத்திற்கொண்டு புதிய ஓய்வூதியத்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த விவசாய மற்றும்விவசாயக்காப்புறுதிச்சபைதீர்மானித்துள்ளது.**

விவசாய, கால்நடை, காணி மற் றும் நீர்ப்பாசன அமைச்சின்கீழ் முன்னெடுக்கப்படும் இந்த விசேட திட்டம், பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சுடன் இணைந்து நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

ஊழியர்கள் தமது நிதி வசதிக்கேற்ப மாதாந்தம் அல்லது குறிப்பிட்ட கால இடைவெளியில் செலுத்த வேண்டிய தவணைக்கட்டணத்தை தாங்களே தீர்மானிக்கும் வசதி வழங்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக, இத்திட்டத்தில் இணைந்தவர்களுக்குப் பல்வேறு காப்புறுதி நன்மைகளும் வழங்கப் படுகின்றன.

இந்தத் திட்டத்தின்கீழ் பங்களிப் பாளர்கள் எந்நேரத்திலும் தமது தவணைக்கட்டணத்தை அதிக ரித்து, ஓய்வூதிய நன்மைகளை மென்மேலும் கூட்டிக்கொள்ளவும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# சடலம் மீட்பு

கொழும்பு, மே 14

உடப்பு, பூனபிட்டிய களப் பில் இருந்து புதிதாக திரும ணமான இளைஞர் ஒருவ ரின் சடலம் ஒன்று கண்டெ டுக்கப்பட்டுள்ளது என்று உடப்புப் பொலிஸார் தெரி வித்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை கண்டெடுக்கப்பட்ட சடலம், உடப்பு, பெரியபாடு பகுதி யைச் சேர்ந்த 22 வயது டைய இளைஞருடையது என அடையாளம் காணப் பட்டுள்ளது.

இளைஞர் மீன்பிடிப்பதற் காகத் தனியாகப் பூனபிட்டிய களப்புக்குச் சென்றிருந்த நிலையில் உயிரிழந்த நிலையில் மீட் கப்பட்டுள்ளார். (எ-இ)

# குஷ் போதையுடன் இந்தியர் சிக்கினார்

கொழும்பு, மே 14

'குஷ்' ரக போதைப்பொருளை நாட் டுக்குக் கடத்திவந்த குற்றச்சாட்டில் வெளிநாட்டுப் பயணி ஒருவர் நேற்றுப் புதன்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபர் 29 வயது டைய இந்திய நாட்டுத் தொழிலதிபர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். சந்தேகநபர் கொண்டு வந்த இரண்டு பயணப்பொதிகளை சோதனை செய்த போது மறைத்து வைக்கப்பட்டிருந்த 4 கிலோ 389 கிராம் எடையுள்ள சுமார் 4 கோடியே 38 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் பெறுமதியான குஷ் ரக போதைப்பொருள் கண்டுபிடிக் கப்பட்டது.

மேலதிக விசாரணைகளுக்காக கைது செய்யப்பட்ட இந்தியப் பிரஜை கட்டு நாயக்க விமானநிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரி டம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ச-இ)



# அதிக மழைவீழ்ச்சி கெஸ்பேவவில் பதிவு

கொழும்பு, மே 14


நாட்டின் பல பாகங்களிலும் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணி முதல் நேற்றுக் காலை 6.30 மணி வரையிலான காலப்பகுதியில் கொழும்பு மாவட்டத்தின் கெஸ்பேவ பகுதியில் அதிகூடியாக 204.0 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது என வளிமண்டலவியல் திணைக் களம் தெரிவித்துள்ளது.


அதேவேளை கம்பஹா மாவட்டத்தின் வேயங்கொட பகுதியில் 145.5 மி.மீ மழைவீழ்ச்சியும், இரத்தினபுரி மாவட்டத்தின் கிலி மலே பகுதியில் 121.0 மி.மீ மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளது. கம்பஹாவின் வத்துபிட்டிவலவில் 105.5 மி.மீ மழைவீழ்ச்சி யும் காலியின் தேவிதுர தோட்டம் பகுதியில் 102.5 மி.மீ மழைவீழ்ச்சியும் , களுத்துறையின் பண்டாரகமவில் 102.5 மி.மீ மழைவீழ்ச்சியும் ஹொரணவில் 101.5 மி.மீ மழைவீழ்ச் சியும் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

14.05.2026 வியாழக்கிழமை





# சூறாவளியால் பறந்த கூரைகள் இன்னமும் திருத்தப்படவில்லை!



## மழையில் நனைந்தவாறு வியாபாரம் பரந்தன் சந்தையில் அவலம்

**பரந்தன், மே 14**

**கிளிநொச்சி மாவட்ட பரந்தன் சந்தை, மினி சூறாவளித் தாக்கத்துக்கு உள்ளாகி சுமார் இரண்டு வாரங்கள் கடந்தும் இதுவரை எவ்வித் புனரமைப்புப் பணிகளும் முன்னெடுக்கப்படவில்லை என வியாபாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவித்துள்ள தாவது-

கடந்த ஏப்ரல் 30ஆம் திகதி வீசிய பலத்த மினி சூறாவளி காரணமாக பரந்தன் வர்த்தக நிலையங்கள் மற்றும் சந்தைக் கட்டடத்தொகுதிகளின் கூரைகள் முற்றாகத் தூக்கி வீசப்பட்டன. அன்று முதல் இன்று வரை சந்தை கூரையின்றி திறந்த நிலையிலேயே காணப்படுகிறது.

தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக வியாபாரிகள் பெரும் இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர். கூரை இல்லாத காரணத்தால் காய்கறி வியாபாரிகள் கொண்டுவரும் பொருள்கள் மழையில் நனைந்து விரைவில் அழுகிவிடுகின்றன. இதனால் அவற்றை விற்பனை செய்யவோ அல்லது பயன்படுத்தவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பாதுகாப்பு மற்றும் வசதிக் குறைபாடு காரணமாக நுகர்வோரும் சந்தைக்குவருவது பெருமளவு குறைந்துள்ளது. இதனால் நாளாந்த வருமானம் இன்றி வியாபாரிகள் பெரும் நஷ்டத்தைச் சந்தித்து வருகின்றனர். மழைக்கு மத்தியிலேயே நனைந்த வண்ணம் வியாபாரம் செய்ய வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். எமது வாழ்வாதாரத்தைக் கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாகக் கட்டடத் தொகுதியைப் புனரமைத்துத் தர வேண்டும் - என்றனர். (ச-113)

## வீதியின் மதகு சேதம் விவசாயிகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 14

வீதியின் மதகு சேதமடைந்துள்ளதால், தென்மராட்சி தெற்குப் பிரதேச மக்களும், அங்குள்ள நெல்வயல்களில் சிறுதானியப் பயிர்களைப் பயிரிட்ட விவசாயிகளும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். அத்துடன் அந்தப் பகுதியிலுள்ள மயானத்துக்கு இறுதிக்கிரியைகள் செய்வதற்கு நடந்து செல்ல வேண்டிய அவலநிலையும் ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தென்மராட்சி தெற்குக் கைதடி நாவற்குழியிலிருந்து வயல்களூடாக அமைந்துள்ள இந்த வீதியை, சாவகச்சேரிக்குச் செல்வதற்கு குறுகிய பாதை என்பதால், அந்தப் பகுதி மக்கள் நீண்டகாலமாக பயன்படுத்திவருகின்றனர். கைதடி நாவற்குழியிலிருந்து மறவன்புலவு தண்டவாளம் வரையான வீதியில் அமைந்துள்ள மதகு தற்போது உடைந்துள்ளது. இதனால் வயல் தேவைகளுக்கு உழவு இயந்திரம் உட்பட வாகனங்களை வீதியால் கொண்டு செல்ல முடியாதுள்ளது. மதகு உடைந்து சேசமடைந்துள்ளதால் வாகனம் செல்லத்தடை எனும் அறிவிப்புப் பலகை நுணாவில் மேற்கு ஏ-9 வீதியின் கொல்லங்கிராய் வீதியிலும், கைதடி நாவற்குழி ஏ32 வீதியிலும் வைக்கப்பட்டுள்ளது. இதனால் வீதியின் இருமருங்கிலும் வயல்களில் பயிரிடப்பட்டுள்ள சிறு தானியப் பயிர்களுக்கு உர வகைகள் கொண்டு செல்வதற்கு விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட் டுள்ளது. (க-9-பி)

## சமய அறிவுப்போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், மே 14

திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு, காளி கோவிலடி சனசமூக நிலையத்தால் வருடாந்தம் நடத்தப்படும் சமய அறிவுப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பரீட்சைக்கு விண்ணப்பிப்பவர்கள் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள அம்பாள் மல்ரி சென்ரரில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று, எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்கமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பாலர் பிரிவு1, பாலர் பிரிவு2, கீழ்ப்பிரிவு, கனிஷ்ட பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு, திறந்த போட்டி ஆகிய பிரிவுகளில் பரீட்சைகள் நடைபெறும்.

எதிர்வரும் 16 ஆம் திகதி மாலை 3 மணிக்கு பாலர் வகுப்பு, தரம் 1, பாலர் பிரிவுதரம்2,3, கீழ்ப்பிரிவு தரம்4,5 ஆகிய பிரிவுகளுக்கு நடைபெறும். எதிர்வரும் 17ஆம் திகதி மாலை 3 மணிக்கு ஏனைய பிரிவுகளுக்கான பரீட்சைகள் நடைபெறும்.

எதிர்வரும் 24ஆம் திகதி மாலை 3 மணிக்கு கோலப்போட்டி, தோரணம் பின்னுதல் போட்டி இடம்பெறும். திறந்த போட்டிப் பரீட்சை எதிர்வரும் 28ஆம் திகதி மாலை 3 மணிக்கு நடைபெறும். பாலர் வகுப்பு தொடக்கம் தரம் 5 வரையான மாணவர்களுக்கு ஆலய மண்டபத்திலும், தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்களுக்கு பரமேஸ்வரா வித்தியாலயத்திலும் பரீட்சைகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## தெய்வீக இசை அரங்கம்

யாழ்ப்பாணம், மே 14

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வாகத் தெய்வீக இசை அரங்கம் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.45 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் வேல்மாறன் சாருமதி, வேல்மாறன் சாரங்கி ஆகியோர் இசைக் கலைமணி. நடேசு செல்வச்சந்திரன் குழுவினருடன் இணைந்து வழங்கும் தெய்வீக இசை அரங்கம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-66)

## தேர்த்திருவிழாவில் தெய்வீகப்பேருரை

யாழ்ப்பாணம், மே 14

கோப்பாய் தெற்கு அருள்மிகு ஸ்ரீவீரமாகாளி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த முதலாம் திகதி வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகிய நிலையில் எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது. உற்சவத்தில் இன்று வியாழக்கிழமை 10.30 மணிக்கு தேர்த்திருவிழா இடம்பெறுகின்றது. அதில் தெய்வீகப்பேருரை வண்ணையை மதுர கவி காரை எம்.பி. அருளானந்தம் நிகழ்த்தவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)



## சடலத்தை அடையாளம் காண்க

யாழ்ப்பாணம், மே 14

யாழ்.போதனா மருத்துவமனையில் விடுதி இலக்கம் 8 இல் அனுமதிக்கப்பட்டு, கடந்த மாதம் 16 ஆம்திகதி உயிரிழந்த திலகரட்ணம் என்பவரது சடலம் உரிமை கோரப்படாத நிலையில் உள்ளது. சடலத்தை அடையாளம் காட்ட உதவுமாறு மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (க)

## விளையாட்டு விழா


வரணி, மே 14

வரணி தென்னிந்திய திருச்சபை முன்பள்ளியின் மழலைகள் விளையாட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் வண. சா. அன்ரனிராஜ் தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வின் பிரதம விருந்தினராக இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய அதிபர் தி. அபராஜிதன் சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் பா.ஞானநிரோஜன் கிராம அலுவலர் செல்வி சோ.கீர்த்திகா சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் சி.பிரபாகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-159)

## வெளிநாட்டுச் சிகரெட்டுகள் பறிமுதல்

சீனாவில் உற்பத்தி செய்யப்பட்ட சிகரெட்டுகளை, சட்ட விரோதமான முறையில் இலங்கைக்குள் கடத்தி வர முயன்ற வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் கொண்டு வந்த இரண்டு பயணப்பொதிகளைச் சோதனை செய்த போது, அவற்றில் மறைத்துவைக்கப்பட்டிருந்த சுமார் 46 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான சீனத் உற்பத்தி 31,000 சிகரெட்டுகள் அடங்கிய 155 சிகரெட் பெட்டிகள் மீட்கப்பட் டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அவுஸ்திரேலியத் தூதுவருடன் ரவிகரன் எம்.பி. சந்திப்பு

முல்லைத்தீவு, மே 14
இலங்கைக்கான அவுஸ்ரேலியத் தூதுவர் மெத்தியூ டக்வேர்த் மற்றும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோருக்கு இடையிலாளசந்திப்பு முல்லைத்தீவு கள்ளப்பாடு வடக்கு பகுதியில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்றுள்ளது.
சந்திப்பில் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் உள்ளிட்ட வன்னிப்பிராந்தியத்தில் நிலவும் நில ஆக்கிரமிப்புகள், விவசாயிகள் மற்றும் மீனவ மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மக்களின் வாழ்வாதார நிலைமைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. மேலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், அவுஸ்ரேலியத் தூதுவருக்கு தெளிவுபடுத்தியிருந்தார். (ச-246)




# வடமராட்சியில் நினைவுக்கஞ்சி

யாழ்ப்பாணம், மே 14
முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு நினைவு வாரத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில், பொதுமக்களுக்கு முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி வழங்கும் நிகழ்வு வல்லைப்பகுதியில் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது. தமிழின அழிப்பு நினைவு வாரம் முழுவதும், பல இடங்களிலும் முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சியை வழங்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் ஏற்பாடு செய்துள்ளனர். (க-66)



அலுவலக நேர முகாமைத்துவ ஒழுங்குகளை முறையாகப் பின்பற்றி மாதாந்தம் ஒவ்வொரு மாதத்திலும் வரும் வேலை நாள்களில் சிறப்பாகக் கடமையாற்றிய அலுவலர்களைப் பாராட்டி மெச்சுரை வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி மாவட்டச்செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்டச் செயலர் எஸ். முரளிதரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ச)





# திருநாவுக்கரசு சுவாமி குருபூசை நல்லூரில்!

யாழ்ப்பாணம், மே 14
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் நடத்திய திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூசை நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நல்லை ஆதீன மண்டபத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா தலைமையில் இடம்பெற்றது.
திருமுறை வழிபாடு, தொடக்க உரையைத் தொடர்ந்து 'அப்பர் பெருமான் ஒரு சமயப் போராளி' எனும் தலைப்பில் மூத்த கவிஞர் சோ.பத்மநாதன் உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து கோண்டாவில் கைலாசநாத வேத சிவாகம அறநெறிப் பாடசாலை மாணவர்கள் பண்ணிசைத்தனர். (ச-66)

ஏழாலை மேற்கு ஜே/201 கிராம அலுவலர் பிரிவுக்கான சிவில் பாதுகாப்புக்குழுக் கூட்டம் அண்மையில் சிவில் பாதுகாப்புக்குழுத் தலைவர் வூ.பிரணவன் தலைமையில் கிராம அபிவிருத்திச் சபைக் கட்டடத்தில் இடம்பெற்றது. இதில் கிராம அலுவலர், சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் பொதுமக்கள் ஆகியோர் பங்கேற்றனர். (ச)

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், மே 14
வட்டுக்கோட்டை தெற்கு காக்கையம்பதி அருள்மிகு ஸ்ரீகாளி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் கடந்த 10ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை வரை இடம்பெறவுள்ளது.
உற்சவ காலத்தில் தினமும் மு.ப.11 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். இரவு 7 மணிக்கு வசந்தமண்டபப் பூசை நடைபெற்று அம்பாள் வீதியுலா வருவார். (ச)



யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சர்வதேச தாதியர் தினம் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை கொண்டாடப்பட்டது. தாதியர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவையைப் பாராட்டும் நிகழ்வுகளும், தாதியர் தினத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் விழிப்புணர்வு நாடகங்களும் அரங்கேற்றப்பட்டன. (ச-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# யாழ். வெதுப்பக மரபுரிமைகள் அருங்காட்சியகக் கண்காட்சி!

யாழ்ப்பாணம்,மே 14
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையின் மாணவர் அமைப்பான கலை வட்டத்தின் ஒழுங்கு படுத்தலில், 'வாணி பிஸ்கட்ஸ்: யாழ்ப்பாண வெதுப்பக மரபுரிமையின் உடனடி அருங்காட்சியகம்' எனும் விசேட காட்சிப்படுத்தல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைக் கலைக்கூடத்தில் நாளை வெள்ளிக்கிழமை பி.ப.3.30 மணிக்கு ஆரம்பமாகியுள்ளது.

இந்தக் கண்காட்சி எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை வரை ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த நாள்களில் காலை 10 மணிமுதல் மாலை 4 மணிவரை இடம் பெறும்.

நிகழ்வின் முக்கிய அங்கமாக, எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை மாலை 2.30 மணிக்கு வெதுப்பக உரிமையாளர் சபாபதிப்பிள்ளை நவரட்ணராசாவின் வாய்மொழி வரலாற்று உரையும் இடம்பெறவுள்ளது. இதில் யாழ்ப்பாண வெதுப்பகத் துறையின் சவால்கள் மற்றும் வளர்ச்சி குறித்த சுவாரஸ்யமான தகவல்களை அவர் பகிர்ந்துகொள்வார்.

இந்தக் கண்காட்சியை பாடசாலை மாணவர்கள், கலை ஆர்வலர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என அனைவரும் பார்வையிட முடியும் என கலை வட்டம் அழைப்பு விடுத்துள்ளது. (ச)

## 622 கிலோ பீடி இலைகளுடன் கற்பிட்டியில் இருவர் கைது

கற்பிட்டி ஆலங்குடா பகுதியில் இலங்கை கடற்படை நடத்திய ஒரு சிறப்பு தேடுதல் நடவடிக்கையில், சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட சுமார் 622 கிலோகிராம் பீடி இலைகளுடன் இரண்டு சந்தேகநபர்கள் கடற்படையினரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளனர். வடமேற்கு கடற்படைக் கட்டளையின் இலங்கை கடற்படைக் கப்பலான விஜயவிற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், கற்பிட்டியின் ஆலங்குடா கடற்பகுதியில் நடத்தப்பட்ட இந்த சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, அந்தப் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த சந்தேகத்திற்கிடமான ஒரு டிங்கிப் படகு சோதனையிடப்பட்டது. அந்தப் படகினுள் இருபது பைகளில் பொதிசெய்யப்பட்டிருந்த சுமார் 622 கிலோகிராம் பீடி இலைகள் கைப்பற்றப்பட்டன. படகில் இருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக சட்டநடவடிக்கைக்காக சந்தேகநபர்களையும், கைப்பற்றப்பட்ட டிங்கி படகு மற்றும் பீடி இலைகள் என்பவற்றையும் புத்தளம் கலால் திணைக்கள அலுவலகத்தில் ஒப்படைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (எ-இ)


## கேள்வி அறிவித்தல்
## PSDG & Ministry Work-2026
## நானாட்டான் பிரதேச சபை

1. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு (Div.PC), நானாட்டான் பிரதேச சபை, நானாட்டான், மன்னார். கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகைமையுடைய கேள்வியாளர்களிடமிருந்து பொறிமுறைப்படுத்தப்பட்ட பெறுகை கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றது.
2. இது தொடர்பான மேலதிக தகவல்களை நாடளாவிய ரீதியில் பிரசுரிக்கப்பட்ட 2026.05.13 ஆந் திகதிய தினக்குரல் தினசரி பத்திரிகையின் 09 ஆம் பக்கத்தில் பார்வையிடலாம்.
3. மேலும் தலைவர், நானாட்டான் பிரதேசசபை, நானாட்டான் பிரதான அலுவலகத்தில், அல்லது குறிப்பிடப்பட்டுள்ள தொடர்பாடல் முறைகள் ஊடாகவோ எம்மை தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

| No | Contract No. | Name of the Contract | Estimated civil Cost (LKR in Mn) Without VAT | CIDA Required | | Required Bid Security | | Contract Period days | Bid Validity Date |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | Specialty | Grade | Amount (Rs.) | Validity Period | | |
| PSDG 2026 | | | | | | | | | |
| 01 | NP/14/42(6)/ PSDG/2026/03 | Construction of Gunawardana Road at Vankalai | 4,15 | High way Construction | C8 & above | 42,000.00 | 2026.08.14 | 98 | 2026.07.17 |
| 02 | NP/14/42(6)/ PSDG/2026/04 | Construction of Aththikuli 1st Internal Road | 4.16 | High way Construction | C8 & above | 42,000.00 | 2026.08.14 | 98 | 2026.07.17 |
| 03 | NP/14/42(6)/ PSDG/2026/05 | Construction of St.Antony's Road at Sirukandal | 4.15 | High way Construction | C8 & above | 42,000.00 | 2026.08.14 | 98 | 2026.07.17 |
| 04 | NP/14/42(6)/PS DG/2026/06 | Improvement of Murunkan Public Play Ground | 3.23 | Building Construction | C9 & above | 32,500.00 | 2026.08.14 | 98 | 2026.07.17 |
| 05 | NP/14/42(6)/PS DG/2026/07 | Purchasing & Fixing of Street Lights at Nanattan PS | 1.58 | Specialty / Registered Suppliers | | 16,000.00 | 2026.08.14 | 30 | 2026.07.17 |
| Ministry of Pub. Administration, Provincial Council | | | | | | | | | |
| 06 | NP/14/42(6)Small Bridge/Madhukkarai/2026 | Reconstruction of Small Bridge on Madhukkarai Neelamadhu Road | 3.94 | High way Construction | C9 & above | 40,000.00 | 2026.08.14 | 98 | 2026.07.17 |

* கேள்வி பத்திரம் விநியோகிக்கப்படும் திகதி : 2026.05.13-2026.05.27 (9.00-15.30 வரை பெற்றுக்கொள்ளலாம்)
* கேள்வி பத்திரம் கையளிக்கும் இறுதி திகதி : 2026.05.29

Chairman,
Divisional Procurement Committee (Div.PC)
Nanattan Pradeshiya Sabha
Nanattan, Mannar.

தொலைபேசி இலக்கம் :- 0232050652
தொலை நகல் இலக்கம் : 0232051719
மின்னஞ்சல் :- nanattanpsabha@gmail.com

(cr.47533) N-1

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை புத்தூர் ஏலவிற்பனை

நீர்வேலியில் அமைந்துள்ள எமது திண்மக்கழிவகற்றல் நிலையத்தில் தார் பரல்கள் ஏலவிற்பனை செய்யப்படவுள்ளன.

காலம் :- 2026.05.22 வெள்ளிக் கிழமை மு.ப 10.00 மணி
இடம் :- திண்மக்கழிவு மீள்சுழற்சி நிலையம், நீர்வேலி

**நிபந்தனைகள்**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்
02. ஏலவிற்பனைதாரர் ஆள்அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ. அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் சமூகமளித்தல் வேண்டும்.
03. ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 5000.00 இனையும் மீளளிக்க முடியாத படிவக்கட்டணமாக ரூபா 1,000.00 இனையும் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். உரிய கட்டணங்களை செலுத்தாதோர் ஏலவிற்பனையில் பங்குபற்ற முடியாது.
04. ஏலத்தில் விற்பனை செய்யப்படும் பொருட்களை அலுவலக வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 2.00 மணி வரை பார்வையிடலாம்.
05. மேலதிக விபரங்களுக்கு தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் நேரடியாகவோ அல்லது 0212058867, 0212058981 எனும் அலுவலக தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற முடியும்.

**தியாகராஜா நிரோஷ்**
**தவிசாளர்,**
**வலிகிழக்கு பிரதேசசபை,**
**புத்தூர்.**

2026.05.14 (R-532) (N-1)

விராட் விஸ்வப் பிரம்மனே நம
## மரண அறிவித்தல்

பிறப்பு 15.04.1952 — இறப்பு 13.05.2026



### திருமதி சௌந்தலாதேவி சிவஞானம்

கும்பளையை பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சௌந்தலாதேவி சிவஞானம் நேற்று (13.05.2026) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.
அன்னார் பரமாநந்தம் ரங்கநாயகியின் செல்வப்புதல்வியும், அமரர் முத்துலிங்கம் பாக்கியத்தின் அன்பு மருமகளும், சிவஞானம் அவர்களின் அன்பு மனைவியும், மேருபரனி, தேனுஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.05.2026 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 312 6944

(CS 31802) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3ஆம் ஆண்டு நினைவுடன்

பிறப்பு
08.04.1984

இறப்பு
14.05.2023



### அமரர் குலசிங்கம் கிருபாகரன்

அனிஞ்சியன்குளம், மல்லாவி.
(கிருபா கராஜ்)

மூன்று ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் உங்கள்
நினைவுகள் எம் நெஞ்சில் மறைய வில்லை
அண்ணனே நீங்கள் இல்லாத ஒவ்வொரு நாளும்
ஆறுதல் சொல்ல யாரும் இல்லை.
தோள் கொடுக்க அண்ணன் இல்லை என்ற
வலி சுமக்க முடியாமல் தவிக்கிறது எம்
நெஞ்சம் எமக்கு ஆறுதலாக இருந்த
அன்னையையும் உங்களுக்கு துணையாக
அழைத்தீர்களே உங்களுக்கு கண்ணீரால்
அஞ்சலி செய்கின்றோம்.

*என்றும் உங்கள் நினைவுடன்*
தங்கை, மைத்துனர்,
மருமகள். (CS 31803)A

## வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம்

**மேற்படி உற்சவம் 01.06.2026 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகிறது. தொடர்ந்து 14.06.2026 ஆம் திகதி வரை நடைபெறும். 13ஆம் திகதி தேர்த்திருவிழா, 14 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.**

பின்வரும் விடயங்கள் விலை மனுக்கோரலுக்கு விடப்படுகிறது. பெற விரும்புபவர்கள் உரிய தகவல்களோடு 24.05.2026 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு ஆலய கரும பீடத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**விடயங்கள்:**

1) 60 அடி தகரக்கொட்டகையும் 50 கதிரயையும், கொட்டகை பத்து பத்து அடிக்கு மறைப்பு செய்தல்
2) மின்சார ஒளி அமைப்பு (14 நாட்களுக்கும்)
3) ஐஸ்பழக்கடை, கடலைகடை, தேநீர்க்கடை, மணிக்கடை என்பவற்றுக்கு நில ஒதுக்கீடு வழங்குதல்.

**குறிப்பு:**

அடையாளஅட்டை, மருத்துவச்சான்றிதழ் எதிர்பார்க்கப்படும்.

அத்துடன் வெளிப்பிரதேச செயலகங்களில் இருந்து வரும் வர்த்தகர்களுக்கு தங்கள் பிரதேச செயலக அனுமதிச் சான்றிதழ் எதிர்பார்க்கப்படும்.

**பரிபாலன சபை,**
**சிட்டிவேரம்**
**கண்ணகை அம்மன் ஆலயம்.**
(CR 47535) A

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



### திருமதி சண்முகலிங்கம் ஈஸ்வரி

கல்வியங்காடு நல்லூரை பிறப்பிடமாகவும், பொற்றொழிலாளர் வீதி, சங்கத்தானை சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட சண்முகலிங்கம் ஈஸ்வரி கடந்த 11.05.2026 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - இரத்தினம் தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், சண்முகலிங்கம் பத்தர் (வதனி நகைமாடம் - கொடிகாமம்) அவர்களின் பாசமிகு மனைவியும், சிவப்பிரியா, காலஞ்சென்ற லதுர்ஜிகாந் மற்றும் மதிவதனி, காலஞ்சென்ற பிரதாப் ஆகியோரின் பாசமிகு தாயாரும், செந்தில்க்குமரன், இதயரஞ்சினி, திவாகரன், மயூரி ஆகியோரின் அன்பு மாமியும், சிவதேனிஜன், சுகிவர்ணவி, வதுர்ஷா, முகிலன், மயூரி, நிவேதிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான பாக்கியமலர், சறோஜா, தங்கேஸ்வரன் மற்றும் சிதம்பரநாதன், திவியமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2026) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தோற்றம்** 21.11.1945 **மறைவு** 11.05.2026

**பொற்றொழிலாளர் வீதி,**
**சங்கத்தானை,**
**சாவகச்சேரி.**

(cs.61426) (N-1)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 800 2724**
**077 943 9333**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள ஏற்பாட்டில் காரைநகர் வடமராட்சி தெற்கு, மேற்கு மற்றும் தென்மராட்சி ஆகிய பிரதேச கலைஞர்களின் மகாசங்கமம் நிகழ்வு காரைநகர் கலாசார மத்திய நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது. காரைநகர் பிரதேச செயலக கலாசார அலுவலர் திருமதி சத்யா கோபிநாத் தலைமையில் நடைபெற்ற சங்கம நிகழ்வில் அந்தந்தப் பிரதேச கலைஞர்களின் ஆற்றுகைகள் இடம்பெற்றன. (ச-9)


## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, நுணாவில் கண்டி வீதியில் இருந்து 200m தூரத்தில் 2 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**077 224 7902**

## விற்பனைக்கு

1. Counter Table - 1
2. சிறிய, நீள மேசை - 2
3. RR Tea Machine - 1
4. கண்ணாடி பெட்டி - 1

விலை பேசித்தீர்மானிக்கலாம்.

**தொடர்பு: 077 975 9033**

(CS 61427) A


## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை புத்தூர் மீள்சுழற்சிக்குரிய திண்மக்கழிவு விற்பனைக்கான கேள்வி கோரல் - 2026

எமது சபையினால் கழிவகற்றல் முறைமையின் கீழ் சேகரிக்கப்பட்டு தரம் பிரிக்கப்பட்ட இரும்பு. செப்பு. அலுமினியம். பிளாஸ்ரிக் கழிவு. பொலித்தின் கழிவு. தகரக் கழிவு. ரயர். தரம் பிரித்த பசளைகள். கண்ணாடிக்கழிவு மற்றும் மீள் சுழற்சிக்கு பயன்படுத்தக்கூடிய பொருட்கள் மற்றும் பழைய பத்திரிகைகள் ஆகியவற்றினை விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு தரம் பிரிக்கப்பட்ட இக்கழிவுகளை 2026.06.01 – 2026.12.31 ஆம் திகதி வரையான காலத்திற்கு செல்லுபடியாகும் வண்ணம் கேள்விகள் கொள்வனவாளர்களிடமிருந்து எம்மால் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி | : 14.05.2026 தொடக்கம் 27.05.2026 (அலுவலக நேரம்) |
| கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி | : 29.05.2026 முற்பகல் 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை) |
| கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி | : 29.05.2026 முற்பகல் 10.30 மணி |
| கேள்வி திறக்கும் இடம் | : வலி கிழக்கு பிரதேச சபை. தலைமை அலுவலகம் புத்தூர் |

**நியந்தனைகள்**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை சமூகமளித்து கேள்விப்படிவத்தினை பெற்றுக்கொள்ள வேண்டும்.
03. கேள்விப்படிவக் கட்டணமாக ரூபா 1,000 செலுத்தி இரண்டு படிவங்களை பெற்றுக்கொள்ள வேண்டும்.
04. மீளளிக்கப்படக்கூடிய கேள்வி வைப்பு பணமாக ரூபா 5000.00 செலுத்தப்பட வேண்டும்.
05. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி இணைப் பிரதி என தனித் தனியான கடித உறையில் இட்டு இரு உறைகளையும் பிறிதொரு உறையிலிட்டு மூடி ஒட்டி. இடது பக்க மேல் மூலையில் "மீள்சுழற்சிக்குரிய திண்மக்கழிவு விற்பனைக்கான கேள்வி கோரல்-2026" எனக்குறிப்பிட்டு " தவிசாளர். வலிகாமம் கிழக்கு பிரதேச சபை. புத்தூர்" என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 29.05.2026 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு கிடைக்ககூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். அல்லது நேரடியாக அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும்.
06. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
07. கூடிய கேள்வித்தொகை சமர்ப்பித்ததன் அடிப்படையில் தெரிவு செய்யப்படும். கேள்விதாரர் ரூபா 10.000.00 இனை பாதுகாப்பு பிணை வைப்பாக செலுத்தி உரிய ஒப்பந்தத்தினை மேற்கொள்ளுதல் வேண்டும். இப்பிணைப்பணமானது உரிய ஒப்பந்த காலப்பகுதிக்கு பின்னர் மீளளிக்கப்படும்.
08. கேள்வியில் சித்தியடையும் கேள்விதாரர்கள் ஒப்பந்தத்திற்கு அமைய எம்மால் அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் உரிய தினத்தில் சமூகமளித்து அன்றைய தினமே கட்டணத்தினை செலுத்தி தரம் பிரிப்பு நிலையத்திலிருந்து திண்மக்கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்தல் வேண்டும்.
09. கேள்விதாரர்களின் ஒவ்வொரு பொருட்களுக்கும் கூடிய கேள்வியை சமர்ப்பிக்கும் கேள்விதாரர்கள் தனித்தனியாக தெரிவுசெய்யப்படுவார்கள்.
10. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் கேள்விச்சபைக்கு உண்டு.
11. மேலதிக விபரங்களை வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் நேரடியாகவோ அல்லது 0212058867, 0212058981 எனும் அலுவலக தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

**தியாகராஜா நிரோஷ்**
**தவிசாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 03 . 1948



மறைவு 10 . 05 . 2026

### சத்தியபாலதேவி (சந்திரா) ஞானப்பிரகாசம்

ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட சத்தியபாலதேவி (சந்திரா) ஞானப்பிரகாசம் அவர்கள் 10.05.2026 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார் அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - தவமணி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும். காலஞ்சென்றவர்களான திரு.திருமதி செல்லையா அவர்களின் மருமகளும். ஞானப்பிரகாசம் அவர்களின் அன்பு மனைவியும். நிவேதிகாவின் பாசமிகு தாயாரும். ஷன்க்ரிஸ் அவர்களின் அன்பு மாமியாரும். தேவரணி (Canada). காலஞ்சென்றவர்களான சுகிர்தராணி. விமலராணி மற்றும் பிரேமராணி (Srilanka). மாலினிதேவி (UK). தவபாலலிங்கம் (UK). பாலகுமார்(ரகு) (UK). சதீஷ்குமார் (Germany) ஆகியோரின் பாசமிகு சகோதரியும். நாகேஸ்வரன் (Canada). காலஞ்சென்ற தங்கராஜா மற்றும் ராஜேந்திரம் (UK). வசந்தமலர் (UK). கயலினி (UK). வனிதா (Germany). பெரியராஜா (Srilanka). ஜெயா (Srilanka) ஆகியோரின் அன்பு மைத்துனியும். பிரதீபா. ஜனாதீபா. பிரசாத். பிரகாஷ். தனுஷா. தர்ஷிகா. பிரதிகா. ஜிரோஜன் ஆகியோரின் அன்புள்ள பெரியம்மாவும். சோபியா. கபிலன். வின்சென்ட். சாரங்கன். சைலேஷ். சுஜித்தா. வர்ஷன் ஆகியோரின் அன்பு பெரிய மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.05.2026) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் கொவுவெல பொது மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
Shankrish(son-in-law) +44 7841 975304 (UK)
Balakumar (Rahu) (Brother) +44 7960 956043 (UK)

தகவல்: **குடும்பத்தினர்**

(cs 61425) N-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 14 . 01 . 1959



இறப்பு 13 . 05 . 2026

### திருமதி மகேந்திரராசா விக்னேஸ்வரி

மட்டுவில்வடக்கு முத்துமாரி அம்மன்கோவில் வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேந்திரராசா. விக்னேஸ்வரி. அவர்கள் நேற்று (13.05.2026) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் மட்டுவில் வடக்கைச்சேர்ந்த அமரர்களான இராமலிங்கம்- திலகவதி தம்பதியரின் அன்புமகளும், கல்வயலைச்சேர்ந்த அமர்களான சின்னத்துரை - தில்லைநாயகம் தம்பதியரின் அன்பு மருமகளும் மகேந்திரராசாவின் பாசமிகு மனைவியும். சிறீரங்கா (லண்டன்), ரதிக்கா ( அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் தென்மராட்சி), ரஜீகா(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும். புகழேந்தி.(லண்டன்),தரிசன் (தரிசன் எனரபிறைசஸ் மீசாலை) பிரபாகரன்( பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆத்மிகா, ஆசிகா, ஆதிரன், அபினாஸ், அனாமிகா ஆகியோரின் பேர்த்தியும், அன்னார் கந்தசாமி, தேவகுஞ்சரம்.அமரர் தங்கராசா, நகுலேஸ்வரி, அமரர் இராஜேஸ்வரி, அமரர் தியாகராசா, தனலட்சுமி, அமரர் மகாஇலட்சுமி,, பத்மாவதி, பரமானந்தம், மனோகரன், அமரர் சிறீபாஸ்கரன், அமரர் சிறீரங்கன், ஆகியோரின் சகோதரியும், அமரர் மணிவண்ணன், மல்லிகாநந்தன், அமரர் மல்லிகாதேவி, அமரர் மகாலிங்கம், ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2026) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மட்டுவில் ஊரிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

முத்துமாரியம்மன் கோவில் வீதி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்.
077 668 7320
077 164 4761

(CR 47537)A

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

## ஹெரோய்ன்...

சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை பகுதியில் கடந்த 2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1.44 கிராம் ஹெரோய்னுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார். நீதிமன்ற விசாரணைகளைத் தொடர்ந்து இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அலெக்ஸ்ராஜா முன்னிலையில் தீர்ப்புக்காக எடுக்கப்பட்டது. இதன்போதே, குற்றவாளிக்கு ஏழு வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
அத்துடன், ஒரு லட்சம் ரூபா தண்டப் பணமும் விதிக்கப்பட்டுள்ளது. அதைச் செலுத்தாத பட்சத்தில் மேலும் 12 மாத கால சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த வழக்கில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் அரச சட்டவாதி கா.நசிகேதன் மன்றில் முன்னிலையாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-66-26)

## தொடர்...

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக குணசேகரவின் வழிகாட்டலில் கிளிநொச்சி மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களில் ஆணுக்கு 24 வயது என்றும் பெண்ணுக்கு 20 வயது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
கிளிநொச்சி உதயநகர், அம்பாள் குளம், விநாயகபுரம், சாந்தபுரம், கனகாம்பிகைக்குளம் உள்ளிட்ட பகுதிகளில் இடம்பெற்ற பல திருட்டுகளுடன் சந்தேகநபர்களுக்குத் தொடர்பு உண்டு என்று பொலிஸார் தமது முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர்களிடம் இருந்து 10 பவுணுக்கு மேற்பட்ட நகைகள், பெறுமதியான பொருள்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைக்குப் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (அ-ம-113)

## அனுமதியற்ற...

திருநெல்வேலிப் பகுதியில் உள்ள கட்டடமொன்றின் மூன்றாவது தளம், பிரதேசசபையின் அனுமதி இல்லாமல் அமைக்கப்பட்டு வந்தது. இதற்கு எதிராக நல்லூர்ப் பிரதேசசபையால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், அந்த வழக்கு யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் நீதிமன்றத்தால் நேற்றுத் தீர்ப்புக்காக எடுக்கப்பட்டது. இதன்போதே, அனுமதியின்றிக் கட்டப்பட்ட கட்டுமானத்தை நல்லூர்ப் பிரதேசசபையால் அகற்றமுடியும் என்றும், அதற்கான செலவை கட்டடத்தின் உரிமையாளர் வழங்க வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது. அத்துடன், குறித்த கட்டடத்தின் உரிமையாளருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் விதிக்கப்பட்டது. (அ-ம-26-66)

## குமுதினிப்...

வீரபத்திரப்பிள்ளையார் ஆலயம், நெடுந்தீவு மாவிலித்துறை சவேரியார் ஆலயம், நெடுந்தீவு தென்னிந்தியத் திருச்சபை ஆலயம் மற்றும் நெடுந்தீவு தேவசபை ஆலயம் என்பவற்றில் சம நேரத்தில் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து நாளை காலை 9.15 மணியளவில் நெடுந்தீவு மாவிலித்துறை முகப் பகுதியில் படுகொலை செய்யப்பட்டோர் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
1985ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதி நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவான் நோக்கிப் பயணித்த குமுதினிப் படகு இலங்கைக் கடற்படையால் நடுக்கடலில் வழிமறிக்கப்பட்டு அதிலிருந்த குழந்தைகள், பெண்கள் உட்பட மொத்தம் 33 பேர் குத்தியும், வெட்டியும் படுகொலை செய்யப்பட்டனர். மேலும் 30க்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் காப்பாற்றப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-66)

## தமிழினப்...

கால் கஞ்சியும் பரிமாறப்பட்டது. முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்தவர்களின் நினைவாக அல்லைப்பிட்டி பங்குத் தந்தையால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பொதுமக்களின் மலரஞ்சலி இடம்பெற்றது. (அ-ம-26)

## ட்ரோன்களின்...

விடுதலைப் புலிகளே. குறைந்த உயரத்தில் செயற்படுவதற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட்ட இலகுரக விமானங்களைப் பயன்படுத்தி, அரசுசாரா அமைப்புகளால் வான்வெளியில் ஊடுருவி திடீர் தாக்குதல்களை நடத்தி, மரபுசார் இராணுவத்தின் மீது உளவியல் மற்றும் பொருளாதார அழுத்தத்தை ஏற்படுத்த முடியும் என்பதை அவர்கள் நிரூபித்தனர்.
பெரும்பாலும் இரவில் தாழ்வாகப் பறந்து, ராடரின் வரம்புகளைச் சாதகமாகப் பயன்படுத்தி புதிய போர் உத்தியை அறிமுகம் செய்ததில் விடுதலைப் புலிகள் வெற்றிபெற்றனர். இது அரசு சாரா அமைப்புகளால் கூட வான்வெளியைக் கைப்பற்ற முடியும் என்ற ஒரு சக்திவாய்ந்த பாடமாக அமைந்தது. மலிவான தாக்குதல் கருவிகள், தாக்குபவர்கள் தங்கள் திறனுக்காகச் செலவிடுவதை விட தற்காப்பவர்களை எதிர் நடவடிக்கைகளுக்காக மிக அதிகமாகச் செலவிடச் செய்யும் நிலையை ஏற்படுத்தியது. இதுவே உலகம் இப்போது காணும் நவீன ட்ரோன் போரின் ஒரு முன்னோடியாக இருந்தது - என்றுள்ளார். (அ-ம)

## கிளிநொச்சியில்...

களால் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக நேற்று முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.
தமிழர் தாயகம் முழுவதும் தற்போது முள்ளிவாய்க்கால் வாரம் உணர்வுபூர்வமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இதன் ஒரு பகுதியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் தாயகம் முழுவதும் முள்ளிவாய்க்கால் கஞ்சியை விநியோகம் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-113)

## பொன்விழா...

ஆரம்பமாகவுள்ளது. வட்டுக்கோட்டை - பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்துக்கு அருகில் 'வட்டுக்கோட்டை 50 எழுச்சி மாநாட்டுக் குழு'வின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. இதேவேளை வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் 50ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.நகரில் அமைந்துள்ள தந்தை செல்வா அரங்கில் நினைவு எழுச்சி மாநாடு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

## சிறுமி...

உள்ள குடும்பமொன்றைச் சேர்ந்த 13 வயதுச் சிறுமியே, அவருடைய வீட்டுக்கு அருகில் வசிப்பவரால் தொடர்ச்சியாக வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இது தொடர்பில் இராமநாதபுரம் பொலிஸாரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் அந்தச் சிறுமி சிகிச்சை பெற்றுவரும் நிலையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-ம-55)

## 'ஐஸ்'...

தெரியவருவதாவது:-
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். அவரை பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்று தடுப்புக் காவலில் பொலிஸார் வைத்திருந்தனர். இதன்போது நேற்றுக்காலை அவருக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் அவரிடம் விசாரித்தபோது, பொலிஸார் தன்னைக் கைதுசெய்ய வரும்போது 10 கிராம் போதைப்பொருளை பொலித்தீன் பைக்கற்றுடன் விழுங்கிய விடயத்தைக் கூறியுள்ளார். இதையடுத்தே அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். குறித்த இளைஞர் இதற்கு முன்னரும் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-27)

## கடற்...

வழங்கியுள்ளார். இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-
நாட்டின் வடகிழக்குத் திசையில் நிலவும் காற்றமுத்த தாழ்வுநிலை காரணமாக கடற்பகுதிகளில் குழப்பமான காலநிலை நிலவுகின்றது. இந்த நிலைமை எதிர்வரும் சில நாள்களுக்குத் தொடர்வதற்கு வாய்ப்புள்ளது. ஆதலால், பொதுமக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டியது அவசியம். எனவே கடற்பரப்பு கொந்தளிப்பாகக் காணப்பட்டாலோ அல்லது விரைவாகக் காலநிலை மாற்றங்கள் ஏற்பட்டாலோ மீனவர்கள் கடற்றொழில் நடவடிக்கைகளைத் தவிர்க்க வேண்டும் - என்றுள்ளது. (அ-ம)

## இராணுவக்...

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் மன்னார் மாவட்டச்செயலகத்தின் கேட்போர் கூடத்தில், மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும், பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
இதன்போது பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க மேலும் தெரிவித்ததாவது: மன்னாரில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகள் தொடர்பில் ஜனாதிபதி அநுர விசேட அவதானம் செலுத்தியுள்ளார். அந்தக் காணிகளை விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அவர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். ஜனாதிபதியின் அறிவுறுத்தலின்படி, எதிர்வரும் 25ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சின் முக்கியமான அதிகாரிகள் மன்னாருக்கு வருகைதந்து நிலைமைகளை நேரில் ஆராயவுள்ளனர். இதன்போது காத்திரமான முடிவுகள் எட்டப்படவுள்ளன.
மன்னார் மாவட்டத்தில் வாழ்ந்த மக்கள், 1990ஆம் ஆண்டிலிருந்து யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்தனர். 2010, 2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் அவர்கள் மீளக் குடியேறினாலும் அவர்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு இதுவரை இழப்பீடுகள் எவையும் முறையாக வழங்கப்படவில்லை. எனவே, பாதிக்கப்பட்ட அனைவருக்கும் பொதுவான இழப்பீட்டுத் திட்டத்தை முன்மொழிவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது - என்றார். (அ-ம-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். ஆனால், புதிய முயற்சிகளை மட்டும் தவிர்த்துவிடுவது நல்லது. மாலையில் குடும்பத்துடன் கோயிலுக்குச் செல்லும் வாய்ப்பு அமையும்.

**இடபம்:** புதியமுயற்சிகளைத்தவிர்க்கவும். எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். பிள்ளைகளால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**மிதுனம்:** எதிலும் வெற்றியே ஏற்படும் நாள். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன்-மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** இன்று பரபரப்பாகச் செயற்படவேண்டிய சூழ்நிலை காணப்படுகிறது. காரியங்களில் அனுகூலம் உண்டா கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தந்தையின் தேவையைப் பூர்த்தி செய்வதில் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**சிம்மம்:** மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது. உணவு விஷயத்தில் கவனம் தேவை. அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த காரியம் தாமதமானாலும் முடிந்துவிடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். இளைய சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

**விருச்சிகம்:** தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். உறவினர்கள் வருகையால் அனுகூலம் உண்டாகும்.

**தனுசு:** நல்ல வாய்ப்புகள் எதிர்ப்படும் நாளாக அமையும். கணவன் - மனைவிக்கிடையில் அந்நியோன்யம்அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**மகரம்:** இறைவழிபாட்டுடன் நாளைத் தொடங்குவீர்கள். உங்கள் உற்சாகம் மற்றவர்களையும் தொற்றிக் கொள்ளும். தாய்வழி உறவினர்களால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும்.

# திட்டமிடலற்ற கல்விச் சீர்திருத்தத்தால் மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கும்

## ஆசிரியர் சங்கச் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, மே 14

இலங்கையின் தற்போதைய கல்விச் சீர்திருத்தங்கள் முறையான திட்டமிடல் இல்லாதவை. காலாவதியான பாடத்திட்டங்களால் 40 இலட்சம் மாணவர்களின் எதிர்காலம் பாழாகி வருகின்றது என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அரசாங்கம் புதிய கல்விச் சீர்திருத்தங்கள் என்ற பெயரில் கடந்த காலத் தோல்வியுற்ற திட்டங்களை மீண்டும் திணிக்க முயல்கின்றது.

தற்போது முன்வைக்கப்பட்டுள்ள சீர்திருத்தங்கள் கோத்தாபய ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட பழைய திட்டங்களே தவிர, நவீனமானவை அல்ல. 6ஆம் தரத்துக்கான புதிய பாடத்திட்டம் இந்த ஆண்டு ஆரம்பிக்கப்படாமல் அடுத்த ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதனால் 2027ஆம் ஆண்டு நடக்கவேண்டிய புதிய பாடத்திட்டத்துக்கான சாதாரண தரப் பரீட்சை 2030ஆம் ஆண்டுக்கும், உயர் தரப் பரீட்சை 2034ஆம் ஆண்டுக்கும் தள்ளிப்போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு 8 ஆண்டுகளுக்கும் ஒருமுறை பாடத்திட்டம் மாற்றப்படவேண்டும். 2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் 2023ஆம் ஆண்டு மாற்றப்பட்டிருக்க வேண்டிய பாடத்திட்டம் இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. உலகம் செயற்கை நுண்ணறிவு போன்ற தொழில்நுட்பங் களில் வேகமாக முன்னேறும் நிலையில், எமது மாணவர்கள் இன்னும் 2015ஆம் ஆண்டுக்குரிய பழைய தகவல்களையே படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை ஆரம்பித்தாலும், அவர்கள் முழுமையாகத் தயாராகி வெளியேற 2030ஆம் ஆண்டு ஆகிவிடும். இந்த இடைவெளியை நிரப்ப அரசாங்கத்திடம் முறையான திட்டமில்லை. அரச பாடசாலைகளின் தரம் வீழ்ச்சியடைந்து வருவதால், பாடசாலைக்குச் செல்லாமல் டியூஷன் சென்றால் மட்டுமே பரீட்சையில் சித்தியடையமுடியும் என்ற மனநிலை மாணவர்களிடம் திணிக்கப்பட்டுள்ளது - என்றார். (ச-இ)



தென்மராட்சிப் பிரதேச செயலக கைதடி சமுர்த்தி வங்கியின் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழா அண்மையில் கைதடி மேற்கு சரஸ்வதிசனசமூகநிலைய மைதானத்தில் நடைபெற்றது. (ச-9)

**தேவை**

ஊர்ச் சேவல், பேடு தேவை,
கூடிய விலையில்
கொள்வனவு செய்யப்படும்.

தொடர்பு: 077 3127 498

(CS 316019)

# மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 01 . 1961



மறைவு 13 . 05 . 2026

## நாகலிங்கம் கணேசலிங்கம்

(இளைப்பாறிய தபால் ஊழியர்)

பண்டத்தரிப்பு செட்டிகுறிச்சியைச் சேர்ந்த நாகலிங்கம் கணேசலிங்கம் நேற்று (13.05.2026) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - புஸ்பராணி தம்பதியரின் அன்பு மகனும், கரணவாய் தெற்கு வலவன் தோட்டத்தை சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா - மகாதேவி தம்பதியரின் மருமகனும், பாலகுமாரியின் அன்புக் கணவரும், தபஸினி, சுபாங்கினி (யாழ் - மருதனார்மடம் அக்கடமி) ஆகியோரின் தந்தையும், சண்முகலிங்கம் (ஜேர்மனி), வாசுகி (சுவிஸ்), சத்தியலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், உதயகுமார் (கனடா), நந்தகுமாரி (ஜேர்மனி), மோகன்குமார் (லண்டன்), கமலகுமாரி (பிரான்ஸ்), கிருஸ்ணகுமாரி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2026) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, சம்பில்துறை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செட்டிகுறிச்சி,
பண்டத்தரிப்பு.

தகவல்:
குடும்பத்தினர்
021 225 0392
074 042 4492

(cs 47531) N-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.05.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org